
www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

39.அ)தேசிய அளவில் நடைபெற்ற மரம் இயற்கையின் வரம் எனும் தலைப்பிலான கட்டுரைப்போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக.

(அல்லது)

ஆ).உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும் விலை கூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுகளுடன் உணவுப் பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம் எழுதுக.

**40.படம் உணர்த்தும் கருத்தினை கவினுற ஐந்து தொடர்களில் எழுதுக.**



41.திருமதி.ச.தீபா என்பவர், "4,அண்ணா நகர், கரூர்-5" என்ற முகவரியில் வசிக்கின்றார்.மைய நூலகத்தில் உறுப்பினராக விரும்புகிறார்.தேர்வர் தன்னைக் தீபாவாக நினைத்து உரிய படிவம் நிரப்புக.

42.அ)புயல் எச்சரிக்கை அறிவிப்பைக் கேட்ட நீங்கள்,உங்களையும் உங்கள் குடும்பத்தாரையும் காப்பாற்றும் வகையில் செய்யும் செயல்களை வரிசைப்படுத்துக.

(அல்லது)

ஆ)மொழிபெயர்க்க.

**The Golden sun gets up early in the morning and starts its bright rays to fade away the dark. The milky clouds start their wandering. The colourful birds start twitting their morning melodies in percussion. The cute butterflies dance around the flowers. The flowers' fragrance fills the breeze. The breeze gently blows everywhere and makes everything pleasant**

பகுதி-5

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. (3×8=24)**

43.அ)தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைக்குறிப்புகளை எழுதுக.

(அல்லது)

ஆ) உங்கள் இல்லத்துக்கு வந்த உறவினருக்கு நீங்கள் செய்த விருந்தோம்பலை அழகுற விவரித்து எழுதுக.

**44.அ) ஒரு பக்க அளவில் உரையாடல் எழுதுக.**

சூழல் : வெளிநாட்டிலிருந்து உங்கள் இல்லத்திற்கு வந்திருக்கும் உறவினரின் மகளுக்குத் தமிழ் மொழியைப் பேச மட்டுமே தெரியும். ஆங்கில இலக்கியம் படித்த அவரிடம் தமிழ் உரைநடையின் சிறப்புப் பற்றி உரையாடுதல்.

(அல்லது)

ஆ)அன்னமய்யா என்னும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினைக் கோபல்லபுரத்து மக்கள் கதைப்பகுதி கொண்டு விவரிக்க.

45.அ)சான்றோர் வளர்த்த தமிழ் என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.

(அல்லது)

**ஆ)குறிப்புகளைப் பயன்படுத்தி கட்டுரை எழுதுக.**

முன்னுரை –சுற்றுச்சூழல் பாதுகாப்பு காற்றுமாசு –தீமைகள் – கட்டுப்படுத்தும் வழிகள் – மரம் வளர்ப்போம் –முடிவுரை

**ஈ.கே.எம்.அ.க.மதரஸா இஸ்லாமியா உயர்நிலைப் பள்ளி,ஈரோடு.**

**முதல் இடைப் பருவத் தேர்வு - 2024**

**பத்தாம் வகுப்பு - தமிழ்**

**காலம் :3.00மணி மதிப்பெண் :100**

**பகுதி-1(மதிப்பெண் :15)**

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.ஏற்புடைய விடையைக் குறியீட்டுடன் எழுதவும்**

**1.வேர்க்கடலை,மிளகாய் விதை,மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிக்கும் பயிர்வகை**

அ)குலை வகை ஆ)மணிவகை இ)கொழுந்து வகை ஈ)இலைவகை

**2.இந்திய மொழிகளிலே மேலைநாட்டு எழுத்துருவில் முதலில் அச்சேறிய மொழி**

அ)இந்தி ஆ)சமஸ்கிருதம் இ)தமிழ் ஈ)தெலுங்கு

**3.'பாடுஇமிழ் பனிக்கடல் பருகி' என்னும் முல்லைப்பாட்டு அடி உணர்த்தும் அறிவியல் செய்தி யாது?**

அ)கடல்நீர் ஆவியாகி மேகமாதல் ஆ)கடல்நீர் குளிர்ச்சிஅடைதல்

இ)கடல் நீர் ஒலித்தல் ஈ)கடல்நீர் கொந்தளித்தல்

**4.பின்வருவனவற்றுள் முறையான தொடர்**

அ)தமிழர் பண்பாட்டில் தனித்த வாழை இலைக்கு இடமுண்டு

ஆ)தமிழர் வாழை இலைக்குப் பண்பாட்டில் தனித்த இடமுண்டு

இ)தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்குத் தனித்த இடமுண்டு

ஈ)தமிழர் வாழை பண்பாட்டில் தனித்த இலைக்கு இடமுண்டு

**5.சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி – என்னும் அடியில் பாக்கம் என்பது**

அ)புத்தூர் ஆ)மூதூர் இ)பேரூர் ஈ)சிற்றூர்

**6.அறிஞருக்கு நூல்,அறிஞரது நூல் ஆகிய சொற்றொடர்களில் பொருளை வேறுபடுத்தக் காரணமாக அமைவது**

அ)வேற்றுமைஉருபு ஆ)எழுவாய் இ)உவம உருபு ஈ)உரிச்சொல்

**7.மன்னனின் முடிசூட்டு விழாவில் திருப்பாவை திருவெம்பாவை பாடப்படும் நாடு**

அ)அயர்லாந்து ஆ)தாய்லாந்து இ)இந்தியா ஈ)ஆப்ரிக்கா

**8.மினசோட்டா தமிழ்ச்சங்கம் ஆண்டு தோறும் வாழையிலை விருந்தை நடத்தும் இடம்**

அ)அமெரிகாக ஆ)இந்தியா இ)மலேசியா ஈ)ஜப்பான்

**9.சிவப்புச் சட்டை பேசினார் – இத்தொடருக்கான தொகையின் வகை யாது?**

அ)பண்புத்தொகை ஆ)உவமைத் தொகை இ)அன்மொழித்தொகை ஈ)உம்மைத்தொகை

**10.காசிக்காண்டம் என்பது**

அ)காசிநகரத்தின் வரலாற்றைப் பாடும் நூல்

ஆ)காசிமாநகரத்தைக் குறிக்கும் மறுபெயர்

இ)காசிநகரத்தின் பெருமையைப் பாடும் நூல்

ஈ)காசி நகரத்திற்கு வழிப்படுத்தும் நூல்

**11.பாவலரேறு எனக் குறிப்பிடப்படுபவர்**

அ)பெருஞ்சித்திரனார் ஆ)தமிழழகனார் இ)பாவாணர் இ)இளங்குமரனார்

**பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு(12,13,14,15)விடை தருக.**

கிழவிர் புலக் கேளாது கெழீஇ
சேட்புலம்பு அகல இனிய கூறி
பருஉக்குறை பொழிந்த நெய்க்கண் வேவையொடு
குரூஉக்கண் இறடிப் பொம்மல் பெறுகுவிர்

**12.இவ்வடிகள் இடம்பெற்ற நூல் எது?**

அ)காசிக்காண்டம் ஆ)மலைபடுகடாம் இ)முல்லைப்பாட்டு ஈ)கனிச்சாறு

www.Padasalai.Net

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**13.இப்பாடலடியில் உறவினர் என்னும் பெயரினைக் குறிக்கும் சொல்**

அ)கிழவிர் ஆ)கெழீஇ இ)பளுஉ ஈ)குரூஉ

**14.இப்பாடலில் இடம்பெறும் அடி எதுகைச்சொற்கள்**

அ)பளுஉக்குறை-குரூஉக்கண் ஆ)புக்கு-கூறி இ)போல-கேளாது ஈ)இனிய-இறடி

**15.இப்பாடலடியைப் பாடியவர்**

அ)நன்னன் ஆ)பெருங்கௌசிகனார் இ)நப்பூதனார் ஈ)அதிவீரராம பாண்டியர்

**பகுதி-2**

**பிரிவு-1**

**குறிப்பு – எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.**
**(21வது வினாவிற்குக்கட்டாயம் விடையளிக்கவும்) (4×2=8)**

16.விருந்தினரை மகிழ்வித்துக் கூறும் சொற்களின் பெயர் யாது?சொற்களையும் எழுது.

**17.விடைகளுக்கு ஏற்ற வினா அமைக்க.**

அ)தனித்து உண்ணாமை என்பது தமிழரின் விருந்தோம்பல் பண்பின் அடிப்படை.

ஆ)ஹிப்பாலஸ் பருவக் காற்றின் வழியில் யவனக் கடல் வணிகம் பெருகிற்று.

18.'தானியம் ஏதும் இல்லாத நிலையில் விதைக்காக வைத்திருந்த தினையை உரலில் இட்டுக்குற்றியெடுத்து விருந்தினருக்கு விருந்தளித்தாள் தலைவி' என்பது இலக்கியச் செய்தி. விருந்தோம்பலுக்குச் செல்வம் மட்டுமே இன்றியமையாத ஒன்றா? உங்கள் கருத்தைக் குறிப்பிடுக.

19.வசன கவிதை –குறிப்பு வரைக.

20.'இறடிப் பொம்மல் பெறுகுவிர்' – தொடர் உணர்த்தும் பொருளை எழுதுக.

21.'விடல்' எனது முடியும் திருக்குறளை எழுதுக.

**பிரிவு-2**

**குறிப்பு – எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்(5×2=10)**

**22.வினை அடியை விகுதிகளுடன் இணைத்துத் தொழிற்பெயர்களை உருவாக்குக.**

அ.காண் ஆ.தடு

**23.பழமொழிகளை நிறைவு செய்க.:**

1.அளவுக்கு ---------------- 2.ஒரு பானை ----------------

**24.பகுபத உறுப்பிலக்கணம் தருக.** பொறித்த

**25.கலைச்சொற்கள் தருக.** 1.Folk literature 2.Sea Breeze

**26.வினைமுற்றை வினையாலணையும் பெயராக மாற்றித் தொடர்களை இணைத்து எழுதுக.**

1.நேற்று என்னைச் சந்தித்தார்.அவர் என் நண்பர்.

2.ஊட்டமிகு உணவு உண்டார்.அவர் நீண்ட வாழ்நாள் பெற்றார்.

**27.வண்ணமிட்ட தொகைநிலைத் தொடர்களை வகைப்படுத்துக.**

**தங்க மீன்கள் தண்ணீர்த் தொட்டியில்** விளையாடுகின்றன.

**28.**கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க்கு அடுக்கிய
கோடிஉண் டாயினும் இல்-இக்குறளில் வரும் அளபெடைகளை எடுத்து எழுதுக.

**பகுதி -3**

**பிரிவு-1 (2×3=6)**

**குறிப்பு – எவையேனும்இரண்டு வினாக்களுக்கு மட்டும்சுருக்கமாக விடையளிக்கவும்.**

29.'பலர்புகு வாயில் அடைப்பக் கடவுநர் வருவீர் உளீரோ' – வினவுவது ஏன்?

**30.உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

'காற்றுள்ள போதே மின்சாரம் எடுத்துக்கொள்' என்னும் புதுமொழிக்கு வித்தாகிறேன். புதுப்பிக்க கூடிய ஆற்றல் வளமான என்னைப் பயன்படுத்தி மின்னாற்றலை உருவாக்கும் போது நிலக்கரியின் தேவை குறைந்து கனிம வளங்கள் பாதுகாக்கப்படக் காரணமாகின்றேன்.உலக காற்றாலை மின் உற்பத்தியில் இந்தியா ஐந்தாமிடம் பெற்றுள்ளது.இந்தியாவில் தமிழகம் முதலிடம் வகிக்கிறது என்பதும் எனக்குப் பெருமை யே,ஆனால் என்னை உலகிலேயே அதிகளவு மாசுபடுத்தும் நாடுகளில் இரண்டாமிடம் இந்தியாவுக்கு என்பதை அறியும் போது எனக்குப் பெருந்துயரே!

**வினாக்கள்:**

**அ)எது புதுமொழி?**

**ஆ)இந்தியாவிற்கு இரண்டாமிடமும் ஐந்தாமிடமும் எதற்குக் கிடைத்துள்ளது?**

**இ)இவ்வுரைப் பத்திக்குப் பொருத்தமான தலைப்பினை எழுதுக.**

31.பூங்காற்றும் மின்விசிறிக்காற்றும் பேசிக்கொள்வது போல் ஓர்உரையாடல் அமைக்க.

**பிரிவு-2**

**குறிப்பு– எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.**
**34 வது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்கவும். (2×3=6)**

32.கூத்தனைக் கூத்தன் ஆற்றுப்படுத்தலைக் கூத்தராற்றுப்படை எவ்வாறு காட்டுகிறது?

33.தமிழழகனார் தமிழையும் கடலையும்இரட்டுறமொழியும் பாங்கினை விளக்குக.

**34.அடிபிறழாமல் எழுதுக.**அ)சிறுதாம்பு எனத்தொடங்கும் முல்லைப்பாட்டுப் பாடல்.

**(அல்லது)**

ஆ)'முன்னைக்கும் முன்னை...' என்பது முதல்'.... மாண்புகழே' என்பது வரை உள்ள அன்னைமொழியே பாடல்.

**பிரிவு-3 (2×3=6)**

**குறிப்பு –எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.**

35.'தோட்டத்தில் மல்லிகைப்பூ பறித்த பூங்கொடி, வரும் வழியில் ஆடுமாடுகளுக்குத் தண்ணீர்த்தொட்டியில் குடிநீர் நிரப்பினாள்.வீட்டினுள் வந்தவள் சுவர்க்கடிகாரத்தில் மணி பார்த்தாள். இப்பகுதியில் உள்ள தொகைச் சொற்களின் வகைகளைக் குறிப்பிட்டு விரித்து எழுதுக.

36.தற்குறிப்பேற்றவணியை விளக்குக.

37.கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க் கடுக்கிய
கோடிஉண் டாயினும் இல். -இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு காண்க.

**பகுதி -4**

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. (5×5=25)**

38.அ) பெருஞ்சித்திரனாரின் தமிழ் வாழ்த்தையும் மனோன்மணீயம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலையும் ஒப்பிட்டு மேடைப்பேச்சு ஒன்றை உருவாக்குக.

(அல்லது)

ஆ) முல்லைப் பாட்டில் உள்ள கார்காலச் செய்தியை விவரித்து எழுதுக.

www.Padasalai.Net